



திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன் சத்திரம் நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான அர.சக்கரபாணி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட, நகரக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

# ஒட்டன்சத்திரத்தில் கலைஞர் சிலையுடன் கூடிய அலுவலகம் கட்டப்படும்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர. சக்கரபாணி அறிவிப்பு!

ஒட்டன்சத்திரம், செப். 5

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமை வகித்து பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்றபின் செய்த நான்காண்டு கால அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு திண்ணைப் பிரச்சாரம் வாயிலாக எடுத்துக்கூற வேண்டும். நகர் மன்ற உறுப்பினர்கள் பொதுமக்களின் குறைகளை தினமும் கேட்டு அதை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகரின் குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் காய்கறி மார்க்கெட், ஏ.பி.பி. நகர், காந்திநகர் உள்ளிட்ட பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் நகரில் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இருந்த பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றி தரப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் நகர் பகுதியில் 472 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் விரைவில் துவங்க உள்ளது. அங்கன்வாடி மையங்களுக்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் நகரில் அனைத்து வசதிகளுடன் கூடிய நூலகம் ரூ. 3 கோடியில் கட்டப்பட உள்ளது.

ரூ.20 கோடியில் பேருந்து நிலையம் பகுதியில் நடைபாதை மேம்பாலம் அமைக்கப்படவுள்ளது. தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை 5 மாடி கட்டிடத்தில் ரூ. 25 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது வாக்குச்சாவடி முகவர்கள் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணிகளில் ஈடுபட வேண்டும்.

ஒட்டன்சத்திரம் நகர் பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையுடன் கூடிய அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் மோகன், மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி, நகர அவைத் தலைவர் சோமசுந்தரம், செயற்குழு உறுப்பினர் கண்ணன், அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஜெயராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வராஜ்,பாலு, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் பாண்டியராஜன், அரசு ஒப்பந்ததாரர் வேலுச்சாமி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சுரேஷ்குமார் உள்ளிட்ட நகர் மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிர்அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மூன்றாவது முறையாக பாராலிம்பிக்சில்

# பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



**சிகாகோ, செப். 5 -**

**பிரான்ஸில் நடைபெறும் பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டியில் ஆடவர் உயரம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு, ஆடவருக்கான உயரம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

மேலும், இந்தப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த எஸ்ரா ஃப்ரெச் 1.94 மீட்டர் உயரம் தாண்டி தங்கப்பதக்கமும், இந்திய வீரரான ஷரத் குமார் 1.88 மீட்டர் உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கமும், மற்றொரு இந்திய வீரரான தமிழகத்தைச் சேர்ந்த வீரரான மாரியப்பன் தங்கவேலு 1.85 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலமும் வென்றனர்.

இதுபற்றி தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், **"மூன்றாவது முறையாகப் பாராலிம்பிக்ஸில் பதக்கம் வென்றுள்ள மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு வாழ்த்துகள்! தன்னுடைய சாதனைகளால் பலருக்கும் ஊக்கமாகத் திகழும் நமது தங்கமகனின் வெற்றிப் பயணம் தொடர வாழ்த்துகிறேன்"** எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக மாரியப்பன் தங்கவேலு, 2016 ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டீ ஜெனிரோ பாராலிம்பிக்ஸில் உயரம் தாண்டுதலில் தங்கப்பதக்கமும், 2020 ஆம் ஆண்டு டோக்கியோ பாராலிம்பிக்ஸில் வெள்ளி பதக்கமும் வென்றது குறிப்பிடத்தக்கது.



கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (03.09.2024) பெருநகர சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை பார்வையிடும் விதமாக, அண்ணாநகர் மண்டலம், சேத்துப்பட்டில் உள்ள ஈரக்கழிவுகளிலிருந்து இயற்கை உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையத்தினைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வில், கர்நாடக மாநில நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உமா சங்கர், பெங்களூரு மாநகர (BBMP) ஆணையாளர் துஷார் கிரி நாத், கர்நாடக மாநில துணை முதலமைச்சரின் செயலாளர் ராஜேந்திர சோழன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

